**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

OP . 44 of 2020

Civil Case No :: Rw-2

Name :: புவனேஷ்வரி

Father's/Husband's Name :: மகேஷ்மதுசூதனன்

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 27.02.2026

**முதல் விசாரணை**

நான் ஸ்ரீ இராமானுஜம் மெட்ரிகுலேஷன் பள்ளி நான்குநேரியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை நான் கொண்டுவந்துள்ளேன். எதிர்மனுதாரர் சிவகாமி 2010 முதல் 2016 வரை எனது பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்ததற்கான வருகை பதிவேட்டினை நான் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ. 1 ஆகும். நான் 2010 ல் இருந்து பணிபுரிந்து வருகிறேன். ஆசிரியராக பணிபுரிந்தேன். 2022 ல் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் எ.சா-ஆ.3 ஆவணமானது அப்போதைய தலைமை ஆசிரியரால் வழங்கப்பட்ட சான்று என்று என்றால் சரிதான். எதிர்மனுதாரர் சிவகாமி எங்கள் பள்ளியில் இந்தி, ஆங்கிலம், பொது அறிவு போன்ற பாடங்களை பயிற்றுவித்தார் என்றால் சரிதான். மேற்கண்ட

பாடங்களோடு Spoken English ம் எடுத்தார். பள்ளியில் பணியாற்றும் போது நல்ல மனநிலையில்தான் இருந்தார் என்றால் சரிதான். மனநிலை எதுவும் பாதிக்கப்பட்டிருந்தால் ஆசிரியராக பணியாற்றி இருக்க முடியாது சரிதான். அந்த கால கட்டத்தில் எதிர்மனுதாரர் மீது எந்த புகாரும் அளிக்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை

மேற்படி பள்ளியில் நான் 2010 ல் பணிக்கு சேர்ந்தேன். பள்ளி வேலை நாட்களில் நான் பள்ளிக்கு சென்று பாடம் எடுக்கதான் நேரம் சரியாக இருக்கும் என்றும் மற்ற ஆசிரியர்களோடு பழகுவதற்கும் பேசுவதற்கும் நேரம் இருக்காது என்றால் சரிதான். நான் 9ம் வகுப்பு பாடம் எடுத்தேன். எனது பள்ளியின் ஆவணத்தின் படி எதிர்மனுதாரர் எந்த வகுப்பிற்கு பாடம் எடுத்தார் என்பது துலங்காது என்றால் சரிதான். நான் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் எதிர்மனுதாரரிடம் அதிகமாக பழகியது இல்லை என்றால் உணவு இடைவேளையில் பழகுவோம். உட்கார்ந்து பேசுவதற்கு நேரமில்லை மரியாதை நிமித்தமாக வணக்கம் மட்டும் செய்வேன். எதிர்மனுதாரரின் தனிப்பட்ட வாழ்க்கையில் எதாவது மருந்து உட்கொள்கிறாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அதிகமாக எதிர்மனுதாரரிடம் பழகாததால் அவர் நல்ல நிலைமையில் இருக்கிறாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பாணை பெற்று இன்று நீதிமன்றத்திற்கு காலை 10.30 வந்த பிறகு 1 மணி வரை என்னிடம் எதிர்மனுதாரர் பேசவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு பதில் அவரது வழக்கறிஞரும், அவரின் தாயாரும்தான் பேசினார்கள் என்றால் சரிதான். நான் கொண்டுவந்த ஆவணங்களில் சிவகாமி என்று மட்டும்தான் உள்ளதே தவிர அவரின் விலாசம் பற்றி எதுவும் இல்லை என்றால் சரிதான். எனவே பள்ளி ஆவணத்தில் உள்ள சிவகாமியும் எதிர்மனுதாரரும் வெவ்வேறு நபர்கள் என்றால் சரியல்ல. ஒரே நபர்தான். 2010 ம் ஆண்டு ஜுன் மாதத்திற்கும், 2016 ம் ஆண்டு ஜுன் மாதத்திற்குரிய வருகைபதிவேடை மட்டும்தான் கொண்டுவந்துள்ளேன் என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்திற்குரிய வருகை

பதிவேட்டை கொண்டுவரவில்லை என்றால் பணியில் சேர்ந்த மாதத்தின் வருகை பதிவேட்டின் நகலையும் பணியில் இருந்து விலகிய மாதத்தின் நகலையும் கொண்டுவந்துள்ளேன். மற்றவை என் கையில் உள்ளது. நான் சிவகாமிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.